www.padippakam.com

# அரும்பு

ஆசிரியர் அருண்



அரும்பு-1

இதழ்-1

படிப்பகம்

www.padippakam.com

# தைப்பாவை

மார்கழிக்குப் பெண்ணாக
மாசிக்குத் தாயாகப்
பேர்கொழிக்க வந்த
பெட்டகமே! தைப்பாவாய்!
ஊர்களிக்கும் நேரம்
உத்தமனோ டிரவெல்லாம்
சீர்தழுவிச் சேர்ந்தாள்
சிற்றன்னம் கண் துயில்வாள்
ஓர்குழவி இல்லாள்
உளங்குழலி யானாள்தம்
கார்குழலை நீவிக்
கைசேர்த்துக் கொண்டிருக்கும்
பேராளன் சற்றுப்
பிரிந்தால் அவள் எழுவாள்
வாராய், அவளின்
மயக்கந்தீர் தைப்பாவாய்!

www.padippakam.com

# இனி ஒரு விதி செய்வோம்

»CHANCHIVE«
Postbox: 1205
7500 Holstebro . Danmark

கடந்த சில நாட்களில்
நடந்த சில மறக்க முடியாத
சம்பவங்களை மறப்போம்
அல்லது மறக்க முயற்சிப்போம்

துயர் நிறைந்த இந்த ஆண்டை
வழி அனுப்பி விட்டு
வருகின்ற புது வருடத்தை வருக! வருக!
என வரவேற்போம்....
எல்லா மக்களும் எல்லா இனத்தவரும்
எல்லா மதத்தவரும் விரும்புகின்ற நல்ல
தலைவரைத் தருக! தருக!...
என நடப்பு வருடத்தைப்
பிரார்த்திப்போம்.

புதியதோர் வழி கண்டு எல்லா
இயக்கமும் அரசியல் கட்சிகளும்
தமிழர் வாழ்வுக்கு தீர்வு காண வேண்

> வலிய சக்கரங்களையுடைய பெரிய தேர்கள்
> கடலில் ஓட முடியாது. கடலில் ஓடுகின்ற கப்பல்
> களும் நிலத்தில் ஓட முடியாது. — திருவள்ளுவர்



படிப்பகம்

எனப் பிரார்த்திப்போம்

யுத்த மேகமும் போர் முனைப்புகளும்

மறைந்து அமைதி வாழ்வு பேண

எல்லாத் தரப்பினரையும் ஒத்துழைக்

குமாறு இருகரமும் நீட்டி

வேண்டுகின்றோம்....



www.padippakam.com


# நத்தார் பண்டிகை



திவ்விய பாலகன்
யேசுவின் வருகையே நத்தார் பண்டிகை
மக்களுக்காக சிலுவை சுமந்து
புனித நாள் இன்று

ஏரோது மன்னன் குழந்தையாக இருக்கும்
போதே யேசுவை கொன்று விடும்
திட்டத்துடன் அங்கு வரப் போகி-
றான் என்பதை அறிந்த யேசுவின்
தந்தை யோசப்பும், தாய் மரியாவும்
இரவோடு இரவாக குழந்தையைத் தூக்கி-
க் கொண்டு எகிப்துக்கு ஓடி விட்டனர்.
தன் திட்டம் நிறைவேறாமல் போனது
கண்டு, ஏமாற்றம் அடைந்த ஏரோது மன்-
னன் பெத்தல கேமிலும் அந்த நகரைச்
சுற்றியுள்ள இடத்திலும் தான் குழந்தை
யேசு ------


படிப்பகம்

www.padippakam.com

இருக்க வேண்டுமென்று கருதி குறிப்பாக அந்தக் குழந்தையை அவனுக்கு அடையாளம் தெரியாத காரணத்தால் பெத்தலகேம் பகுதியில் பிறந்துள்ள இரண்டு வயதுக்குட்பட்ட எல்லா ஆண் குழந்தைகளையுமே கொன்று விடுமாறு கட்டளையிட்டு.....

அவ்வாறே அந்தக் கொடுமையைச் செய்து முடித்தான். அந்த பாலகன் யேசு, பிறந்த நாளே, இன்றைய நத்தார் திருநாளாகும்.

~~~~ x ~~~~

* உங்களிடமும் உள்ள ஒளி முத்துக்களை பன்றிகளின் முன் போடாதீர்கள் அவை தங்கள் கால்களால் அவைகளை மிதித்துத் துவைத்து விட்டு திரும்பி உங்களையே பீறிவிடும்.

— யேசு
~~~~

www.padippakam.com



# விடைகொடு

படையணி மறவன்
உடல் சேர்வதனால்
கடவுளும் புனிதக்
கருணை பெற்றது
விடைகொடு மனமே
விடை கொடு இனிமேல்
உடல்தான் இல்லை
உயிர் எங்குண்டு

— கவியரசி.

# சொந்தம்

நேற்றென்னும்
பொழுது
மறதிக்குச்
சொந்தம்
மயங்கிடும்
இந்நாள்
உறுதிக்குச்
சொந்தம்
தோற்றமாம்
நாளை
உறவுக்குச் சொந்தம்
தொடரா இவை மூன்றும் வாழ்வுக்குச் சொந்தம்

## தேவை

அரும்பு இதழிற்கு கதை, கட்டுரை, துணுக்கு, கவிதை அனுப்ப விரும்புவோர் தொடர்பிற்கு.

S. Sivagnanam
Axelborg 7 B 2TH
8700 Horsens
DANMARK

தன்னைப்பற்றிப் புறங்கூறுவது ஒவ்வொருவனுக்கும் தெரியுமானால், அதன்பின் உலகில் நான்கு நண்பர்களைக் கூடக் காணமுடியாது. — பாஸ்கல்

படிப்பகம்

www.padippakam.com

# விதி

தாடிக்காரன் அந்தப் பிரதேசத்தில் உள்ள கடற்கரை ஓரமாக ஒரு குடிசையில் தன் வாழ்க்கையை நகர்த்திக் கொண்டிருந்தான். அவ் வீதி வழியால் வருவோரெல்லாம் அவனை ஒரு மாதிரிப் பார்த்துக் கொண்டு போவார்கள்.

அந்தப் பகுதியில் உள்ள பொலிஸ் அதிகாரிகளும் அதிகாலையில் வந்து எழுப்பி இடைக்கிடை விசாரித்து விட்டுப்போவார்கள். தாடிக்காரனின் பஞ்சிடைத்த தலையும் ஒட்டி உலர்ந்த முகமும் புலி நகம் போன்ற பற்களும் அவன் ஒரு கொடுமைக் காரனாக இருக்குமோ என அந்த மக்களுக்கு சொல்லிக் கொண்டிருந்தது. அந்தக் கிராமத்தில் நடக்கும் பல கொலை, களவு, கற்பழிப்பு இவற்றுக்கெல்லாம் தாடிக்காரனே பொறுப்பு என அந்த மக்கள் நம்பிக் கொண்டிருந்தார்கள்.

பொலிஸ் அதிகாரிகளும் அவனை தேடி வரும்போது அவன் வீட்டில் உள்ள சாக்குக் கட்டிலில் உறங்கிக் கொண்டே இருப்பான். அன்று தாடிக்காரனின் குடிலுக்கு ஒரு கிழவர் வந்தார். தாடிக்காரன் படுத்த படுக்கையிலேயே திரும்பிப் பார்த்தான். துடித்து எழும்பி அந்தப் பெரியவருக்கு மரியாதை கொடுத்து அக்கட்டிலில் இருக்க வைத்தான்.

ஐயா! எங்கள் வீட்டுக்கு வந்த நோக்கம் என்ன

> ஒவ்வொருவனும் பிழை செய்யக்கூடியவனே, ஆனால் மூடனைத் தவிர வேறு யாரும் பிழையைத் தொடர்ந்து செய்யமாட்டான். — சிசரோ

www.padippakam.com

என்று மெதுவாகக் கேட்டான்.

எப்படி அப்பா இருக்கிறாய் இன்று உன் பிறந்த நாள் உனக்கு இருபத்தி ஒரு வயதாகிறது. என்றார் பெரியவர்....

அவனது முகத்தில் எந்த வித்தியாசமும் தென்படவில்லை இப்படி எத்தனை ஆண்டுகளை அவன் பார்த்திருப்பான். கிழவரும் எத்தனையோ ஆண்டுகள் ஒவ்வொரு ஆண்டிலும் ஒருநாள் வந்து வாழ்த்துத் தெரிவித்து விட்டுப் போயிருப்பார்.

தாடி தன் கடந்த கால வாழ்க்கையை நினைக்க முடியாமலும் மறக்க முடியாமலும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தான்.

தொடரும்.....



* பிரதமர் வி.பி.சிங்கைப் பார்த்தால் பதவியைப் பறி கொடுத்தவர் போலத் தெரியவில்லை.

* வி.பி.சிங் பதட்டமின்றி தன் நம்பிக்கையுடனும், உறுதியுடனும் இருக்கிறார்.

* என் கொள்கைகளை மக்கள் ஏற்பார்கள் மக்களின் தேவைகளை அறிந்தே நான் செயல்பட்டு வருகிறேன் ; ?

படிப்பகம்

* நான் இன்றைய பிரதமரும், ராஜீவ் காந்தியும் கூட போகமுடியாத இடங்களுக்கு எல்லாம் போயிருக்கிறேன் எனக்கு வாக்களிக்காதவர்கள் கூட என்னைப் பாராட்டி இருக்கிறார்கள்.

* காந்தியடிகளின் அன்பு நிறைந்த இந்தியாவை யும், நேருவின் ஒற்றுமை மிகு இந்தியாவையும் நாம் பாதுகாக்க வேண்டியது அவசியமல்லவா!

* அத்வானியின் ரத யாத்திரை மிகவும் மோசமான கலவரத்தை தூண்டவல்லது.

* நான் தேர்தலை சந்திக்க தயாராக இருக்கிறேன் மக்கள் என்னை நம்பி இருக்கிறார்கள்.———

— வி.பி. சிங்

* சந்திரசேகர் இதுவரை
எந்தவித அமைச்சர்
பதவியையோ துணை
அமைச்சர் பதவியையோ
ஏற்காதவர்.
56 அங்கத்தவர்களை
இயைந்த கட்சியில் எம்
எல்.ஏக்களாக உள்
ளனர் ரஜீவ் காந்தி
யின் ஆட்டாட்சத்தால்
பாரதத்தின் பிரதமர்
பதவியை ஏற்றுள்ளார்

ஏற்றுள்ளாரோ தெ
தோன்றிக் கொள்



www.padippakam.com

தொலைபேசியைக் கண்டறிந்தவர் அமெரிக்க நாட்டை சேர்ந்த அலெக்-சாண்டர் கிரகாம். பெல் என்பவர்.

—— * ——



* சிறந்த எழுத்தாளர்கள் மற்றவர்களைப் போல் எழுத மாட்டார்கள். தாம் எழுதும் உண்மையே எழுதுவார்கள்.

* குழந்தைகள் கடவுளின் தூதர்கள் அவர்கள் நாள்தோறும் அன்பு, உறுதி, அமைதி, ஆகியவற்றைப் போதிப்பர்.

* இலங்கையின் அதி உத்தம ஜனாதிபதி எனப் பாராட்டப்பட்டவர் ஜே. ஆர் ஜெயவர்த்தனா பாராட்டியவர் ராஜீவ். இன்று பிரேமதாசாவை அதே வார்த்தையால் பாராட்டுபவர் யார் தெரியுமா? தொண்டமான்.

* மகாகவி காளிதாசன் எழுதிய புகழ் பெற்ற நூல் எது தெரியுமா? சாகுந்தலம்.

* இராமாயணம் என்னும் மகா காவியத்தை வடமொழியில் எழுதியவர் - வால்மீகி
தமிழ் மொழியில் - கம்பர்.

* மகா கவி பாரதியார் எழுதிய மகா காவியம் பாஞ்சாலி சபதம் குயில் பாட்டு.

* சூரியனை உதிக்க விடாது சாபம் போட்ட பெண் - நளாயினி

—— * ——



படிப்பகம்

www.padippakam.com

6)

# டென்மார்க்

கடல் குளக்கரைகள்
குழைக் காட்டரங்கங்கள்
மேடு பள்ள வயல்
காடும் வனிதையரின்
கொஞ்சும் கிளிமொழிகள்
பேசும் அமைதி மொழி
வீசும் இளந்தென்றல்
வாசம் வருகின்ற
பாசக் கருத்துரைகள்
மாசு மறுவற்ற
வெள்ளைப் பைங்கிளிகள்
பேச மொழி கேட்கும்
டென்மார்க் திருநகரம்.

---

* நான் இந்தியாவில் இருப்பதாகவோ வேறு நாடுகளில் இருப்பதாகவோ யாரும் கூறினால் என் ரத்தத்தின் ரத்தங்கள் நம்பக் கூடாது.

— ஜெயலலிதா.

---

உண்மையை அறிவதற்குச் சாதனம் சிந்தனை.
நாம் உண்மையை அறிந்திருந்தால் சிந்திக்க வேண்டிய இன்றியமையாமை இல்லை. — இங்கர்சால்

www.padippakam.com



# பொறாமை

அருகில் இருந்த லாம்பு விளக்கை பார்த்த போது விட்டில் பூச்சிக்கு பொறாமையாக இருந்தது. தான் மின்னிக் கொண்டு வரும் மின்மினி வெளிச்சத்தை யாரும் பெரிது படுத்தாமல் லாம்பு வெளிச்சத்தில் செயற்படுவது கண்டு ஆச்சரியப்பட்டது.

அதற்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. தன் சிறகுகளை அடித்துக் கொண்டு போய் லாம்பு விளக்குக்குள் விழுந்து சாம்பலாகிவிட்டது.

இலாம்பு விளக்கு பெரிய ஒளியுடன் பிரகாசித்து தணிந்தது. அது மனிதர்களோ, மனிதர்களே யாக்கிரதை, யாக்கிரதை என்று சொல்வது போல் இருந்தது.

வந்தவரெல்லாம்
தங்கிவிட்டால்
இந்த மண்ணில்
நமக்கேது
இடமேது.

வி.பி. சிங்

கணவனும், மனைவியும் மனப்பூர்வமாய் நேசித்தால் தேவர்கள் எல்லோரும் தேவலோகத்தை விட்டு அக் குடும்பத்தில் குடிபுகுந்து பண் இசைப்பார்கள் - இங்கர்சால்

www.padippakam.com



# உருவகம்

வானத்தில் பறந்து சென்ற சிட்டுக்குருவிக்கு சந்தேகம் வந்தது.

மனச்சாட்சி என்றால் என்ன? என்பதற்கு விடை தேடி பறந்த வண்ணம் இருந்தது. சிட்டுக்குருவி ஆலமரத்தில் வந்து உட்கார்ந்து இருந்தது.

அருகிலே ஒவ்வொரு கிளையாக தாவும் அணிலைக் கண்டது. அதனிடம் தன் சந்தேகத்தை கேட்க விரும்பியது.

அணில்ப் பிள்ளையே என அழகாக அழைத்தது. அணில்ப் பிள்ளை அருகே வந்தது. அணிலே எனக்கு ஒரு சந்தேகம் என்று கேட்டது குருவி. ஆ இவ்வளவு தானா கேள் சொல்கிறேன் என்றது அணில். மனச்சாட்சி என்றால் என்ன என்றது குருவி.

அணில் யோசித்து பார்த்தது அதற்கும் தெரியவில்லை. குருவியே எனக்கு தெரியாது இருந்தாலும் இருவரும் சான்றோருடன் போய் கேட்போம் என்றது. இருவரும் காற்றிடம் வந்தனர்.

படிப்பகம்

www.padippakam.com



காற்றே! காற்றே ஒரு சந்தேகம் என்றது திருவி. என்ன என்றது காற்று.

மனசாட்சி என்றால் என்ன? என்றது குருவி. ஆற்றங்கரைக்கு வாருங்கள் அங்கே காட்டுகிறேன் என்றது காற்று. இருவரும் ஆற்றங்கரையில் வந்து அமர்ந்தார்கள்.

ஆற்றங்கரையில் இருந்து இரண்டும் ஆற்றைப் பார்த்தன. ஆற்றின் மேலே தாமரை மலர்கள் மலர்ந்திருந்தன. காற்றுப் பலமாக வீசியது. குருவியும், அணிலும் கீழே பார்த்த வண்ணம் இருந்தன. தாமரை இலை மீது தண்ணீர் ஏறுவதும் முத்து முத்தாக அந்தத் தண்ணீரை கீழே இலை உருட்டுவதுமாக இருந்தது. இது தான் மனசாட்சி என்றது காற்று.

குருவி விளங்கவில்லையே என்றது. அணிலப் பிள்ளை விளங்கி விட்டது நான் சொல்கிறேன் என்றது. காலம் எல்லாம் தண்ணீர் தாங்கிக் கொண்டிருக்கும் தண்ணீரை ஒரு நிமிடம் கூட வைத்திருக்க விரும்பாமல் கீழே உருட்டி

ன் சொந்தக்கார
பாடுக்காவது
ப இந்த பதவியும்
இது வரை கிடை
ாமல் இருந்தான்
டனேயொழுட
நாடாளுகொள்ள
வும்.
- தேவிலால்

www.padippakam.com

(4) தன்னந்தனியே தாமரை இலை இது தான்
மனச்சாட்சி என்றது. இப்படித்தான் சில
மனிதர்களும் என்று அணிலின் பிள்ளை கொ
சுருங்கி விளங்கி விட்டது அணிலே,
அணிலே நீ எல்லா இடமும் தாவித் திரியு
வரத்தை கடவுளிடம் பெற்றும் சிறும் சிறு
என்று சொல்லிக் கொண்டே பறந்து விட்டு

## அஞ்ச் இதழில் * ——

* அரும்பு நடத்தும் கேள்விப் பகுதிக்கு பாடசாலைப் பிள்ளைகளிடம் இருந்து பதிலை எதிர்பார்க்கிறது.

* சரியான விடை தருவோரின் பதில்கள் குலுக்கல் முறையில் தெரிவு செய்து முதல் மூன்று பிரிவுக்கான பரிசில்கள் உரிய காலத்தில் வழங்கப்படும்.

* அரும்பு இதழில் இருக்கும் விளம்பரம் கத்தரிக்கப்பட்டு பதிலை அனுப்பும் கடிதங்களின் மேலுறையில் ஒட்டப்படும் கடிதங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

www.padippakam.com




# மீட்பர்

வானம் அதிர்ந்தது
பூமி பிளந்தது
வையகத்தில் ஒரு
புதுமை
கானமயிலுடன்
கண் கவர் பறவையும்
கூவி அழைத்ததும்
புதுமை
மேவிய பாலகன்
யேசுவின் வருகையை
கூறிய சோதிடர்
பலபேர்
பாவிகள் மீள
யேசுவின் கீதம்
அடிமைகள் வாழ்வினை
மீட்கும் !

கேட்டவரெல்லாம் பாடலாம்
என் பாட்டுக்கு
தாளம் போடலாம்

- ரஜீவ்காந்தி



எந்த வீட்டில் பெண்கள் கௌரவமாக நடத்தப்படு
கின்றார்களோ, அந்த வீட்டில் தேவதைகள்
குடிகொள்கிறார்கள். — மனு-சாஸ்திரம்

படிப்பகம்

# ஒன்றும் இல்லையே
# குறை.

மழை முகில்கள் ஆற்றும்
மலைகள் இல்லை நாளெல்லாம்
விளை நிலங்கள் பாய்ச்சிட
விரையும் நீள நதிகளின்
வழியில் இல்லை எங்களூர்

வானிறங்கி மாரிதான்
பொழிவதென் வழமையா?
பெய்வதேதும் போதுமா
நீர் கிணற்றில் உண்டுதான்
நூறடிக்கு கீழ் துலா

நீ நின்று இறைக்கவென
எத்தனை பேர் எத்தனை
நாளென்ன வெயிலில்
நின்றுழைக்க வேணுமிங்கு
று போயிருக்கிற
நிலத்தில் ஏதும்
வேர் விட

**தமிழீழம்**

ஆச்சி உன் பிள்ளையை
ஆடவிடு
போர்களத்தே
போச்சுதடி
பழங்காலம்
ஆத்தது பார்
தமிழீழம்.
- காசி

www.padippakam.com

ஆயினும் நம் வயல்களில்
அழகிலாமற் போனதோ
போயினும் செழிப்பது
புதுமையோ வான் எப்படி
பாய் இருந்த போதிலும்
எம்மவர்கள் தொழிலை
செய்வதில்லை ஆதலால்
என்றுமில்லையே குறை.

- நன்றி மகாகவி *

——*——

ஒரு தவறு செய்த
ல் அதை தெரிந்து
செய்தால் அவனை
தேவன் என்றாலும்
விடமாட்டேன்.
- அத்வாணி

வாசகப் பெருமக்களுக்கு
எமது உளம் கனிந்த
புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

இருட்டில் இருக்கும் உலகத்தி
ற்கு மெழுகு திரியாக விளங்குவ
— யேசு *



நன்மை செய்தவர்க்கு நன்மை செய்யாதிருப்பது மனித குணத்திற்கு மாறுபாடு. நன்மை செய்தவர்க்குத் தீமை செய்வது பேய்க்குணமாகும்.
— ஜெனீக்கா

படிப்பகம்

www.padippakam.com

8)

# என் இனிய நண்பர்களே!

அரும்பு எனும்
இனிய தமிழ் இலக்கிய இதழை----
உங்கள் தூய மலர்ப் பூங்கரங்களில்
அன்போடு ஒப்படைக்கிறேன்

இலக்கியம் எனும் இனிய
தமிழ்ப் பூங்காவில்
பூத்துக் குலுங்கும்
எத்தனையோ நறுமணம்
கமழும் மலர்களோடு
அரும்பு இணைந்து கொண்டு
புதியதோர் இலக்கிய
மலராக அரும்புகிறது.

திவ்விய பாலகன்
யேசுவின் நத்தார்
தினத்தில் தித்திக்கும்
கருத்துக்களோடு

மனத்தில் உயர்ந்த எண்ணங்களும் இலட்சியங்களும் இருக்குமானல், ஆன்மா உடம்பில் இருக்கும் பொழுதே ஆண்டவன் சன்னிதானத்தில் இருப்பதாகும். - லெனிகா

www.padippakam.com

ஒளி விட்டு
பிரகாசிக்கிறது அரும்பு

இல்லம் தோறும்
இனித்திட
உள்ளம் எல்லாம்
களித்திட
வாசக நண்பர்களின்
ஆதரவை கோரி
இரு கரம் நீட்டி
அரும்புகின்றது அரும்பு.

எனக்கு தான் பதவி
ஆசை என்று சொன்
னார்களே, இப்போது
சந்திரசேகர் பிரதமர்
ஆகி உள்ளாரே.
இதற்கு என்ன
சொல்லுகிறீர்கள்
— மீரா ஜீ தேசாய்

## பொன் உலகம்.

பொன் ஒளி ஞாயிறு
பொன்னின் கதிர்கள்
பொன்னை உருக்கிப்
போட்ட எழில் வான்
சின்னப் புட்கள் சிறகுகள் கொண்டு
திரிவன யாவும்
சிறு மணிப் பூக்கள்
தென்னை இளநீர்
ஓலைக் கூந்தல்
தெவிட்டாப் புலவனுக்கு
இது பொன் உலகம்
காசி.


படிப்பகம்

www.padippakam.com

பொதுவாகப் பெண்கள்தான் வம்பு பேசுவதில் அதிக ஆர்வம் கொள்வார்கள் என்று ஆண்கள் கருதி வருகின்றனர்.
பெண்கள் வம்பு பேசுவதில் அதிக ஆர்வம் காட்டவில்லை என்று ஒரு ஆய்வில் தெரிய வந்துள்ளது.
அவர்கள் தங்கள் ஓய்வு நேரங்களில் ஏதாவது புத்தகங்களைப் படிக்கவும் அல்லது தங்கள் வேலைகளில் ஈடுபடவும் ஆர்வம் உள்ளவர்களாக இருப்பதாக அந்த ஆய்வு வெளிப்படுத்தியுள்ளது.

மரங்கொத்திப் பறவைகள் தங்கள் மூக்கால் மரத்தைக் கொத்தும் வேகம் மணிக்கு 1300 மைல்களாகும்.

* தேவை ஒரு வாசகர் வட்டம் ---




நம் வாழ்க்கையில் நடைபெறும் நிகழ்ச்சிகள் எத்தன்மையது என்பதைவிட அவைகளை நாம் எப்படி ஏற்றுக் கொள்கிறோம் என்பதைபொறுத்தது இன்பம். -ஹம்போல்ட்.

www.padippakam.com

# ஏக்கம்

அரும்பே....
அரும்பே...
நீ
குமிழ் சிரிப்பு
உதிரும் போதும்
மொட்டு.....
நகை
அவிழும் போதும்
கட்டுங் கடங்கா....
கழிப் பெருவகை.
நான்
அடைவதுண்டு
உன்
மெல்லிதழில்
முத்தமிட....
இல்லை
வட்டமிட
என்னால்
முடியவில்லை
ஆனால்
வண்டால் —
முடிந்ததே----

படிப்பகம்

www.padippakam.com

# அரும்பு அடுத்த இதழில்

தைப்பொங்கல் --

கவிதை ..

சிறுகதை ....

ஏவுகணை ....

அரசியல் ....

கட்டுரை ....

தித்திக்கும் துணுக்கு

நகைச்சுவை

கேள்வி பதில்

சினிமா விமர்சனம்;

—

ARU,

படிப்பகம்